

தூத்துக்குடி மாநகரம் திரேஸ்புரம் பகுதி, 8வது வார்டுக்கு உட்பட்ட சிலுவையார் கோவில் தெருவில் சிலுவையார் நற்பணி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ. கீதாஜீவன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த சேகரன், பகுதி செயலாளர் நிர்மல்ராஜ், மாமன்ற உறுப்பினர் பவானி, வட்டச் செயலாளர் ரவிச்சந்திரன், வட்ட பிரதிநிதி மார்ஷல், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ராபர்ட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ப்ரோ கபடி போட்டி - திண்டுக்கல் அணிக்கு ரூ. 3 லட்சம் பரிசு!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.வழங்கினார்!

நெல்லை, ஜன. 23 –

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டை, NGO காலனியில், G V. ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்திய அகில இந்திய அளவிலான ப்ரோ கபடி போட்டியில், வெற்றி பெற்ற திண்டுக்கல் மாவட்டம் அந்தியூர் ”சக்தி பிரதர்ஸ் (SAKTHI BROTHERS) அணிக்கு பரிசுக் கோப்பை மற்றும் ரூபாய் 3 லட்சம் பரிசுத் தொகையை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் வழங்கினார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட பொங்கல் தமிழர் திருநாள் முன்னிட்டு பல்வேறு விளையாட்டு போட்டிகள் கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர்களின் அறிவுறுத்தலின்படி நெல்லை மத்திய மாவட்டத்தில் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக நடந்தது.

அதன்படி நெல்லை பாளையங்கோட்டை என்.ஜி.ஓ காலனியில் ஜீ.வி.ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் நடந்த அகில இந்திய அளவிலான ப்ரோ கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பரிசு வழங்கும் நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. பங் கேற்று வெற்றி பெற்ற திண்டுக்கல் மாவட்டம் அந்தியூர் ”சக்தி பிரதர்ஸ் (Sakthi Brothers) அணிக்கு ரூபாய் 3 லட்சம் பரிசுத்தொகை மற்றும் பரிசு கோப்பையை வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாநகரப் பொறுப்பாளர் ஏ.எல். பி.தினேஷ், மேலப்பாளையம் கிழக்கு பகுதி பொறுப்பாளர் சாமுவேல், வட்டச் செயலாளர் பாளை. ஆர்.சதீஷ்குமார், மாநகர பிரதிநிதி ஜாமியா ஆஷிக், மாமன்ற உறுப்பினர் சகாய ஜூலியட் மேரி,ஒன்றிய கவுன்சிலர் முபின் இஸ்மாயில்,மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் கரன்,தச்சை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேஷ் ஆதித்தன் மானூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கானார்பட்டி சாமுவேல் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர், டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் நாளை (24.01.2026-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், எடப்பாடியில் உள்ள, “ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்”, மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்-முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1) ஜனவரி 20 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.

2) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.

3) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி**

செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க




தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூரில் வடக்கு நகர தி.மு.க. சார்பில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு கபடி போட்டிகள் நகர செயலாளர் அப்பாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை,மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல்காதர் ஆகியோர் பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பைகளை வழங்கினர். நிகழ்வில் கழக நிர்வாகிகள் முருகன், ஐவேந்திரன் தினேஷ், பூங்கொடி, சுரேஷ், முத்துக்குமார், தெற்கு நகர செயலாளர் பீரப்பா, யாத்ராபழனி, யாசின், இளம் பேச்சாளர் சாகுல் ஹமீது உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை நகர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ. எபன் பிரவின் குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற திராவிடப் பொங்கல் விழாவில் நகர் செயலாளர் பஷீர் அகமது தலைமையில் பொதுக்குழு உறுப்பினரும் நகர் மன்ற துணை தலைவருமான ஹமீது சுல்தான் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் உறியடித்தல், கிராமிய போட்டிகள் நடைபெற்றது. இதில் நகர் துணை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள், சிறுவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களால் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாமல் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மற்றும் தற்போது பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் மாதாந்திரம் ரூ.1,000 கருணை ஓய்வூதியமாக வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பால்வளத்துறை அமைச்சர் த . மனோ தங்கராஜ் தமிழ்நாடு பால் கூட்டுறவு சங்க பணியாளர்கள் 20.01.2026 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

### தென்காசி வடக்கு மாவட்டக் கழகம் – சங்கரன்கோவில் நகர கூடைப்பந்துக் கழகம் சார்பில்

# திராவிடப் பொங்கல் விழா - மாவட்ட அளவிலான கூடைப்பந்து போட்டி!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

*தென்காசி, ஜன. 23 -*

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் சங்கரன்கோவில் நகர கூடைப்பந்து கழகம் சார்பில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான கூடைபந்து போட்டியினை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,

திராவிட பொங்கல் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் ஒவ்வொரு ஒன்றிய பகுதிகளிலும்,நகரப் பகுதிகளிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதன்படி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.மற்றும் சங்கரன் கோவில் நகர கூடைப் பந்து கழகம் சார்பில் மாவட்ட அளவிலான கூடைப்பந்துப் போட்டி கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நகர்மன்ற தலைவர் கௌசல்யா முன்னிலையில் நடைபெற்றது.

இதில் சங்கரன்கோவில், செங்கோட்டை, இடைகால், தென்காசி, அம்பாசமுத்திரம் கல்லிடைக்குறிச்சி, கடையம் ஆகிய நகரங்களைச் சேர்ந்த பல்வேறு அணிகள் பங்கேற்று விளையாடினர்.

முன்னதாக விளையாட்டுப் போட்டியை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.பந்தை போட்டு விளையாடி துவக்கி வைத்தார்.

இதில் செங்கோட்டை யூனைடெட் அணியினர் முதலிடம் பெற்றது.கடையம் கேம்பிரிட்ஜ் அணியினர் 2 ஆம் இடமும், சங்கரன்கோவில் நகர கூடைப்பந்து கழக அணியினர் 3 ஆம் இடமும், சங்கரன்கோவில் லெஜெண்ட் அணியினர் 4 ஆம் இடமும் பெற்றனர்.

பின்னர் வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசுகள் வழங்கும் நிகழ்வு தென்காசி மாவட்ட கூடைப் பந்துக் கழகத் தலைவர் கோ.சங்கரநாராயணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வழங்கிய பரிசுத் தொகையினை நகர செயலாளர் மு.பிரகாஷ், அவைத் தலைவர் முப்பிடாதி, மாவட்ட பிரதிநிதி முத்துக்குமார், முன்னாள் வர்த்தக அணி அமைப்பாளர் பத்மநாபன், மாணவரணி வெங்கடேஷ், முன்னாள் கூடைப்பந்து வீரர் மாரீஸ் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் கோமதி அம்பாள் மெட்ரிக் பள்ளி தலைமை ஆசிரியர் பழனி செல்வம்,தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாவட்ட செயற்குழு உறுப்பினர் கவிஞர் மு.ஈஸ்வரமூர்த்தி,

தகவல் தொழில்நுட்ப அணி சிவசங்கர நாராயணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.வினர் மற்றும் தென்காசி மாவட்ட கூடைப்பந்துக் கழகத் துணைத் தலைவர் நா.முப்பிடாதி, பொருளாளர் மூர்த்தி,துணைத் தலைவர் குமார், முத்துக்குமார், நகர கூடைப்பந்து கழகத்தினர் செய்திருந்தனர்.

# வேலூர் தெற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் 25.01.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 05.00 மணியளவில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிபிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப் பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மற்றும் மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1. பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை ஒவ்வொரு வாக்குச்சாவடி தோறும் தேர்வு செய்யப்படும் மகளிரை கொண்டு அரசின் சாதனைகளை பரப்புரை செய்தல்.
2. பிப்ரவரி 1 முதல் 28 வரை சட்டபேரவை தொகுதி வாரியாக தெருமுனை அல்லது அரங்கக் கூட்டங்கள் நடத்துவது.
3. பிப்ரவரி 14 அன்று திருப்பத்தூரில் BLA – 2, BLC மற்றும் BDA ஆகியோர் பங்குபெறும் பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்வது.
4. மார்ச் 8 அன்று திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டில் கலந்துகொள்வது மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.,**

செயலாளர்,

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா ஏ.வி. சுப்பிரமணியன்

### சனவரி 23 (2014)



தஞ்சை மண்டலத்தில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர். மதுக்கூர் ஒன்றியச் செயலாளராக 27 ஆண்டுகள் பணியாற்றி, ஏராளமான கழகத் தோழர்களுக்கு தோன்றாத் துணையாய் நின்று பாடுபட்டவர்.

11வது கழக அமைப்புத் தேர்தலில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

ஆலத்தூர் ஊராட்சித் தலைவராகவும், மதுக்கூர் ஒன்றியப் பெருந்தலைவராக இரண்டு முறையும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

‘மிசா’ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**